பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 மார்கழி 19 செவ்வாய்க்கிழமை 03 .01.2023 கதிர் 309

## டுபாயில் உள்ள குற்றக் கும்பலை அழைத்து வருவதற்கு நடவடிக்கை

இலங்கையின் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பலைச் சேர்ந்த 10 பேர் டுபாயில் இருக்கின்றனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவர்களை அந்நாட்டில் இருந்து நாடு கடத்துவதற்கான கோரிக்கையை டுபாய் அரசுக்கு அனுப்ப இலங்கை அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது என 2

# மார்ச் 4 இல் தேர்தல்?

## ஆணைக்குழு யோசனை




உள்ளூராட்சி சபைத் தேர்தலை மார்ச் 04 ஆம் திகதி நடத்துவது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக் குழு ஆராய்ந்துள்ளது.

தேசிய தேர்தல்கள் ஆணைக் குழுவின் விசேட கூட்டம் இன்று கொழும்பில் நடைபெற்றது.

இதன்போது மார்ச் 10 ஆம் திகதிக்குள் தேர்தலை நடத்துவதற்கு இணக்கம் காணப்பட்டதுடன், தேர்தலை மார்ச் 4 ஆம் திகதி நடத்துவது பற்றியும் ஆராயப்பட்டுள்ளது. 8

## பல்கலை மாணவன் திடீர் சாவு

கஹதுட்டுவ - தியகம தொழில்நுட்ப டிப்ளோமா பல்கலைக்கழக விடுதியில் மயங்கி விழுந்த மாணவன் ஒருவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

மாணவன் தனது அறையில் மயங்கி விழுந்து ஹோமாகம வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்ட போதிலும் 2

## உயர்தர மாணவி சடலமாக மீட்பு!

யாழ்., கொழும்புத்துறைப் பகுதியில் உயர்தரத்தில் கல்வி கற்கும் மாணவி ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வீட்டில் தூக்கில் தொங்கிய நிலையிலேயே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

திடீர் மரண விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டார்.

யாழ். போதனா வைத்தியசாலையில் இடம்பெற்ற பிரேத பரிசோதனையின் போது கழுத்து இறுகி மரணம் 2

## அவசரப்பட்டு பதிலளிக்க முடியாதாம்

### சம்பந்தன் சொல்கின்றார்



தமிழ்த் தேசியக் கட்சிகள் அனைத்தையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் உள்வாங்க வேண்டும் என்று வலியுறுத்தி கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளான ரெலோ தலைவர் செல்வம் 2

## யாழ். மாநகர சபையின் உறுப்பினர்களை கட்சி ரீதியாக ஆளுநரின் செயலர் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஜனவரி 03

யாழ்ப்பாணம் மாநகர சபையின் முதல்வர் பதவி விலகலை அடுத்து ஏற்பட்டுள்ள சூழலில் மாநகர சபை அங்கத்தினர்களான சகல கட்சி உறுப்பினர்களையும் கட்சி ரீதியாக ஆளுநரின் செயலாளர் சந்திக்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என அறிய வந்துள்ளது.

மாநகர சபையின் முதல்வராக பதவி வகித்த வி.மணிவண்ணனின் வரவு - செலவுத் திட்டம் ஒரு தடவை தோல்வி கண்ட நிலையில் இரண்டாவது தடவையும் தோல்வி காணும் என்ற நிலை ஏற்பட்டதனால் அவர் தனது பதவி இராஜினாமாச் செய்துள்ளார்.

இதனால் ஏற்பட்ட முதல்வர் வெற்றிடத்திற்கு ஒருவரை நியமிப்பதா அல்லது சபையை கலைப்பதா என்பதில் மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தரப்பில் காணப்படும் குழப்ப நிலைக்கு மத்தியில் இந்தச் சந்திப்பிற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஒவ்வொரு கட்சியையும் நாளை மறுதினம் தனித் தனியே ஆளுநரின் செயலாளர் சந்தித்துப் பேச ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதேநேரம் கிழக்கு மாகாணம் திருகோணமலை மாவட்டத்தின் கிண்ணியா பிரதேச சபையின் வரவு - செலவுத் திட்டம் இரண்டு தடவை தோற்கடிக்கப்பட்டதற்போது 3 ஆவது தவிசாளர் தேர்விற்கு வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## இரண்டு மாத ஆண் குழந்தை பரிதாப மரணம்

சுவாசக் குழாயின் மேற்பகுதியில் கிருமித் தொற்றாகி சளி கட்டியானமையால் மூச்சடைத்து இரண்டு மாத ஆண் குழந்தை ஒன்று பரிதாபமாக உயிரிழந்துள்ளது.

யாழ். கல்வியங்காட்டைச் சேர்ந்த உமாரமணன் கேதுசன் என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

குழந்தைக்கு சளி ஏற்பட்ட நிலையில் கோப்பாய் மருத்துவமனையில் 2

## மோட்டார் சைக்கிள் விபத்தில் தந்தையும் மகனும் உயிரிழப்பு



வாகன விபத்தில் தந்தையும் மகனும் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் கட்டுவன - ஊருபொக்க வீதியில் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானது 2

## பிறந்த சிசு படுகொலை; காட்டிக் கொடுத்தது நாய்



யாழ்., வடமராட்சி கிழக்கு, வத்திராயனில் பிறந்த சிசு நிலத்தில் புதைக்கப்பட்டுள்ளது. சிசுவின் சடலத்தை நாய் இழுத்துச் சென்றதால், இந்த கொடூரம் வெளிச்சத்துக்கு வந்தது.

வத்திராயன் பகுதியில் நேற்று மாலை 6 மணியளவில் நாய் ஒன்று சிசுவின் சடலத்தை இழுத்துச் சென்றதைப் பொது மக்கள் அவதானித்துள்ளனர். உடனடியாக 2

### 4 வயது சிறுவன் சாவு:

## வீதியை உடனடியாக புனரமைக்கக் கோரி மக்கள் போராட்டம்



விரைவில் தேர்தல் நடைபெறவுள்ளது. எனவே, 8

## சுற்றுலா வீசாவில் வெளிநாடுகளுக்குப் பறந்த அனைத்துப் பெண்களும் கறுப்புப் பட்டியலில்!

### இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தீர்மானம்

சுற்றுலா வீசாவில் சட்டவிரோதமாக வெளிநாடுகளுக்குச் சென்ற அனைத்துப் பெண்களையும் கறுப்புப் பட்டியலில் சேர்க்கத் தீர்மானித்துள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

அவர்களுக்கு எதிராகப் பணியகச் சட்டத்தின் விதிகளின் கீழ் சட்ட நடவடிக்கை எடுக்கவும் தீர்மானித்துள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

பணியகம் விடுத்துள்ள அறிக்கையில் இதனைக் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, ஓமானில் உள்ள இலங்கைத் தூதரகத்தின் கீழ் உள்ள சுரக்ஷா விடுதியில் தங்கியுள்ள இலங்கைப் பெண்களை நாட்டுக்கு 2

## மக்கள் போராட்டத்தை ஒடுக்கவே ரணிலை அரியணை ஏற்றினோம்

### ராஜபக்ஷக்களின் சகா கூறுகின்றார்



மக்கள் போராட்டத்தை (அரகலய) அழிப்பதற்கான ஒரு ஆயுதமாகவே ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக கொண்டு வந்தோம் என்று ராஜபக்ஷக்களின் சகாவான இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த தெரிவித்துள்ளார்.

ராஜபக்ஷ ஆதரவுக் கலைஞரான இராஜ் வீரரத்னவுக்கு அளித்த சர்ச்சைக்குரிய நேர்காணலில் அவர் 2

## மோட்டார் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்தில் உயிரிழந்த தந்தை 66 வயதானவர் என்றும், மகனுக்கு 26 வயது என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இவர்கள் வேகந்தவல பிரதேசத்தைச் சேர்ந்தவர்களாவர்.

சம்பவத்தில் உயிரிழந்த தந்தை திக்வெல்ல பொலிஸ் நிலையத்தில் கான்ஸ்டபிளாக கடமையாற்றி வந்தார் என்று தெரியவந்துள்ளது.

## இரண்டு மாத ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிகிச்சைக்கு சேர்த்துள்ளனர். இந்நிலையில், குழந்தைக்குத் தாய்ப்பால் ஊட்டி விட்டு தூங்கவைத்தனர். குழந்தை அசைவற்ற நிலையில் காணப்பட்டதால் யாழ். போதனா மருத்துவமனைக்கு கொண்டு சென்ற நிலையில் குழந்தை ஏற்கனவே உயிரிழந்துவிட்டதுஎன்றுமருத்துவரால் தெரிவிக்கப்பட்டது.

உயிரிழப்பு தொடர்பில் நேற்று மாலை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டார்.

## உயர்தர ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்றுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## பல்கலை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார்.

தியகம தொழில்நுட்ப டிப்ளோமா பல்கலைக்கழகத்தில் இரண்டாம் வருடத்தில் கல்வி கற்கும் கட்டுகம்பளையைச் சேர்ந்த மலித் யசோத என்ற 25 வயதுடைய மாணவனே உயிரிழந்துள்ளார்.

பிரேத பரிசோதனை இன்று மாலை நடைபெறவுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## பிறந்த ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாயை விரட்டி, சடலத்தை மக்கள் மீட்டனர். பிரசவமான உடனேயே நிலத்தில் புதைக்கப்பட்ட சிசுவின் சடலம் அது என்பது கண்டறியப்பட்டது. நாய் இழுத்துச் சென்ற இடத்துக்கு அண்மையாக உள்ள பகுதியில் சிசு புதைக்கப்பட்ட இடம் அடையாளம் காணப்பட்டது.

நேற்றுமுன்தினம் அந்தச் புதைக்கப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

வீடொன்றின் பின் பகுதியில் சிசுவின் சடலம் புதைக்கப்பட்டிருந்தது. அந்த வீட்டிலிருந்த பெண், பொலிஸாரால் சந்தேகத்தின் அடிப்படையில் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார். அந்தப் பெண் கணவனைப் பிரிந்து வாழ்கின்றார் என்று அயலவர்கள் தெரிவித்தனர்.

## மக்கள் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனைக் குறிப்பிட்டுள்ளார். காலிமுகத்திடலில் உள்ள 'கோட்டா கோ ஹோம்' தளத்தில் நிராயுதபாணியான ஆர்ப்பாட்டக்காரர்களைத் தாக்கிய குண்டர் கும்பலை வழிநடத்தியதற்காக நிஷாந்த வழக்கு விசாரணையை எதிர்கொள்கின்றார். இந்த நேர்காணலில் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கும் போது, ரணில் விக்கிரமசிங்க பொது எதிர்ப்பு இயக்கமான 'அரகலய'வுக்கு பதிலளிக்கும் வகையில் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டார் - என்றார்.

ஒரு குறிப்பிட்ட காரணத்துக்காக நாங்கள் அவரை அழைத்து வந்தோம். 'அரகலய' மக்கள் இயக்கத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்காக ரணிலை ஜனாதிபதியாக நியமித்தோம். அது நன்றாகப் போய்க்கொண்டிருக்கின்றது. 'அரகலய' மீது தாக்குதல் நடத்தவே அவர் நியமிக்கப்பட்டார் - என்று இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த மேலும் தெரிவித்தார்.

## அவசரப்பட்டு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடைக்கலநாதன் மற்றும் புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் ஆகியோர் எழுதிய கடிதம் நேற்று மாலை கிடைக்கப் பெற்றதை உறுதிப்படுத்திய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் இது தொடர்பில் அவசரப்பட்டு பதிலளிக்க விரும்பவில்லை என்று தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதான பங்காளிக் கட்சியான இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் எதிர்வரும் 7ஆம் திகதி மட்டக்களப்பில் நடைபெறவுள்ளது. அந்தக் கூட்டத்தில் இந்தக் கடிதம் தொடர்பில் ஆராய்வார்கள். பொறுமை காக்கவும். அவசரப்பட்டு இந்த விடயத்தில் கருத்துக் கூற நான் விரும்பவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜனநாயகக் கட்சி. எனவே, கூட்டமைப்பின் தலைவர் என்ற ரீதியில் நான் உடனே பதிலளிக்க முடியாது. இது தொடர்பில் ஆராய்ந்த பின்னர்தான் எனது கருத்துக்களை வெளியிடுவேன் - என்றார்

## சுற்றுலா ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அழைத்துவரும் நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

கடந்த 24 ஆம் திகதி முதல் 8 பெண்களைக் கொண்ட குழு இலங்கை வந்தடைந்தது எனவும், மேலும் 6 பெண்கள் இன்று இலங்கைக்கு வரவுள்ளனர் எனவும் பணியகம் குறிப்பிட்டுள்ளது.

தூதரகத்தால் பணியகத்தில் சட்டபூர்வமாகப் பதிவு செய்யப்படாத சுற்றுலா வீசாக்களுடன் ஓமனுக்கு வேலைக்குச் சென்ற 18 பேர் சிக்கித் தவிர்க்கின்றனர் எனவும் அந்த அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

அவர்கள் பணிபுரிந்த பணியிடத்தில் இருந்து தப்பிச் சென்றதால் அவர்களது பெயர்களும் தொழிலாளர் அமைச்சகத்தால் கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன.

எனவே, அவர்களை அந்தந்த முதலாளிகளின் அனுமதியுடன் இலங்கைக்கு அழைத்துவர தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும், சட்டவிரோதமாக நாட்டில் தங்கியுள்ளவர்கள் குழுவாக இருப்பதால், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் இலங்கைக்கு வருவதற்கு விமான ரிக்கெட்டுகளை வழங்க வேண்டும் எனவும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

## டுபாயில் ......

அறியமுடிகின்றது. டுபாய் அரசால் ஏற்கனவே இலங்கைக்கு அனுப்பப்பட்ட ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பலின் தலைவர் ஒருவர், பொலிஸாரின் துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்ததன் காரணமாக, டுபாயில் தலைமறைவாகியுள்ள குற்றக் கும்பல் உறுப்பினர்களை இலங்கைக்கு நாடு கடத்துவது தடைப்பட்டிருந்தது.

இது தொடர்பில் சர்வதேச மன்னிப்புச் சபை டுபாய் அரசிடம் அளித்த முறைப்பாட்டில் குறித்த குற்றக் கும்பல் உறுப்பினர்களை இலங்கைக்கு அனுப்பும் செயற்பாட்டை இடைநிறுத்துமாறு கோரிக்கை விடுத்திருந்தது.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## அமெரிக்காவிடம் ஒரு விண்ணப்பம்

ஜனாதிபதித் தேர்தலில் மிகப்பெரிய வெற்றி, தொடர்ந்து நடைபெற்ற பொது தேர்தலில் மூன்றில் இரண்டு பங்கு ஆசனங்களுடன் அமோக வெற்றி என்று எதிர்பார்க்க முடியாத பலத்துடன் அதிகாரத்துக்கு வந்தவர் கோட்டாபய ராஜபக்ஷ.

இரண்டரை வருடங்களுக்குள் நாட்டையும் பதவியையும் விட்டுத் துண்டைக் காணோம், துணியைக் காணோம் என்று ஒடித்தப்ப வேண்டியவரானார் அவர். இப்போது பெட்டிப் பாம்பாக அடங்கிக் கிடக்கும் கட்டாய நிலைமை. பொது வாழ்க்கைக்குக் கூடத் திரும்ப முடியாத சூழல். அவமானமும் அசௌகரியமும் மிக்க அனுபவங்கள். மீண்டும் அமெரிக்கக் குடியுரிமைக்கு விண்ணப்பித்து, பெற்றுக் கொண்டு, மகனுடன் அப்பாடா என்று அமைதி வாழ்வுக்குத் திரும்புவதற்கு எத்தனிக்கின்றாராம் கோட்டாபய.

நாட்டையும் பொது மக்களையும் மீளவே முடியாத பொருளாதார நெருக்கடிக்குள்ளும், தினசரி வாழ்வியல் சிக்கல்களுக்குள்ளும், அவல நிலைமைக்குள்ளும், மாட்டி விட்டு விட்டு, தான் மட்டும் மீளவும் அமைதியான வாழ்வுக்குத் திரும்பத் துடிக்கின்றார் அவர்.

யுத்தத்தின் பெயரால் அவர் ஏற்படுத்திய அழிவுகளில் – கொடூரங்களில் – இருந்து நாடும் மக்களும் இன்னும் மீளவில்லை. தமிழர் தாயகத்தை உலகின் கண்ணில் பட முடியாத இரும்பு சட்ட வேலிக்குள் ஆக்கிரமித்து வைத்துக் கொண்டு, தனது படைகள் மூலம் அவர் அரங்கேற்றிய கொடூரங்கள் வார்த்தைகளால் வர்ணித்து விட முடியாதவை.

அந்த நேரத்தில், அவரின் ஒன்றுபடுத்தலில் இயக்கப்பட்ட இலங்கைப் படைகள் புரிந்தவை என்று கூறப்படும் யுத்த குற்றங்கள், மனித குலத்திற்கு எதிரான கொடூரங்கள், அடிப்படை மனித உரிமை மீறல்கள் போன்றவை தொடர்பில் நீதி, நியாயமான விசாரணைகள் இன்று வரை நடத்தப்படவே இல்லை. உண்மைகள் கண்டறியப்படவில்லை. பொறுப்புகூறல் நிலைநாட்டப்படவில்லை. மீள நிகழாமை உறுதிப்படுத்தப்படவில்லை. இழப்பீடுகள் வழங்கப்படவில்லை.

இந்தக் குற்றங்கள், கொடூரங்கள் என்பவற்றுக்குப் பிரதான சூத்திரதாரியான குற்றச்சாட்டு கோட்டா மீதுதான் உள்ளது.

உயிரிழந்த மாவீரர்களின் முப்பதாயிரம் கல்லறைகளைபுல்டோசர்போட்டுதகர்த்தமை, கொரோனாத் தொற்றில் உயிரிழந்த முஸ்லிம்கள் மற்றும் கிறிஸ்தவர்களின் உடல்களை அவர்களது மத விழுமியங்களுக்குமாறாகப்பலவந்தமாகஎரித்தமை என்று மரணித்த மனிதர்களுக்கு எதிராகவும் கொடூரங்கள் புரிந்த மோசமான குற்றச்சாட்டு இந்தப் போர்வெறியர் மீது உள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் இவை தொடர்பான பூர்வாங்க விசாரணைகளை ஏற்கனவே ஆரம்பித்து விட்டது.

அவர் மீதான மனித குலத்துக்கு எதிரான கொடூரக் குற்றச்சாட்டுகள் தொடர்பில், சர்வதேச நியமங்களுக்குஅமைவாக, நீதி, நியாயமான விசாரணைகள் நடத்தப்பட்டு, உண்மைகள் கண்டறியப்பட்டு, பொறுப்புக்கூறல் நிலைநாட்டபடும் வரை, அவருக்கு மீளக் குடியுரிமை வழங்குவதை, அமெரிக்கா மீள்பரிசோதனை செய்யக் கூடாது. சர்வதேசத்தில் மனித உரிமையை நிலைநாட்டும் தனது கடப்பாட்டின் அடிப்படையில் அதை அமெரிக்கா நிறுத்தி வைத்திருக்க வேண்டும். இது அமெரிக்காவின் மனித குல கடப்பாடாகும்.

# பரம்பரை பரம்பரையாக நாங்களே கடலட்டை தொழிலைச் செய்தோம்!

அன்னராசா கூறுகிறார்




கடலட்டையை யாரும் தற்போது கொண்டு வரவில்லை. அதனை வைத்து பரம்பரை பரம்பரையாக நாங்கள் தொழில் செய்தோம் என யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க சமாசங்களின் சம்மேளனத்தின் தலைவர் அ.அன்னராசா தெரிவித்துள்ளார்.

காக்கைதீவில் அண்மையில் கடற்றொழில் அமைச்சரால் திறந்துவைக்கப்பட்ட கடலட்டை பதனிடும் தொழிற்சாலை மற்றும் கடலட்டை பண்ணை தொடர்பாக முன்னெடுக்கப்பட போராட்டம் தொடர்பாக யாழ். ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போது இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தனிநபர் முயற்சியில் உருவாக்கப்பட்ட விடயங்களை திறந்து வைத்துவிட்டு நாங்கள் கொண்டு வந்தோம் என சிலர் படம் காட்ட முயற்சிக்கின்றனர். கடலட்டை என்பது காலாதி காலமாக உள்ள விடயம். அதற்குள் அரசியல் படம் காட்டுவதற்கு யாரும் முயற்சிக்கக் கூடாது.

கடலட்டை மூலம் கடற்றொழில் சமூகத்துக்குள் பிரச்சினை ஏற்படுத்தப்படுகிறது. ஏற்கனவே நான் கூறியிருந்தேன் அது நேற்று இடம்பெற்றுள்ளது.

நாங்கள் கடலட்டை பண்ணை வழங்குவதை மறுக்கவில்லை. முறையாக சட்டவிதிப்படி கடற்றொழிலாளிகளுக்கு வழங்குங்கள் என்பதே எமது நிலைப்பாடு.

இந்தப் போராட்டமல்ல எத்தனை எதிர்ப்புக்கள் வந்தாலும் எமது மக்களுக்காக என்றும் தொடர்ந்து குரல் கொடுப்போம். அனலைதீவுக்கு கடற்றொழில் அமைச்சர் விஜயம் மேற்கொண்டபோது பருத்தித்தீவில் சட்டவிரோதமாக இருக்கும் பண்ணைகளை அகற்றுமாறு அப்பகுதி மக்கள் கடற்றொழில் அமைச்சரிடம் கோரிக்கை வைத்தும் இதுவரை எதுவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

இதுபோன்ற சட்ட விரோத பண்ணைகளை தான் நாங்கள் இயன்றளவு எதிர்க்கின்றோம். பருத்தித் தீவில் இன்றளவும் சட்டவிரோதப் பண்ணைகள் காணப்படுகின்றன.

மேற்படி பிரதேச கடற்றொழில் சங்கங்கள், பிரதேச செயலர் போன்றோர் சட்டவிரோதம் என கூறிய போதும் இது வரை எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

இந்தப் பிரச்சினை தொடர்ந்தும் தீர்க்கப்படாத தருணத்தில் ஜனாதிபதி யாழ்ப்பாணம் வருகைதரும் வேளையில் அடையாள போராட்டமொன்றையும் ஏற்பாடு செய்ய வேண்டிவரும்.– எனக் கூறியுள்ளார்.

# மட்டக்களப்பு மிக்கேல் கல்லூரிக்கு இழுபறிக்குப் பின் அதிபர் நியமனம்!

மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியின் அதிபராக இருந்த பயஸ் ஆனந்தராஜா கடந்த 30 ஆம் திகதி ஓய்வுபெற்றதை அடுத்து அந்த வெற்றிடத்துக்கு பதில் அதிபராக ஓர் ஆசிரியர் நியமிக்கப்பட்டிருந்தார்.

எனினும், அந்த ஆசிரியரின் நியமனத்தை பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர்கள் உள்ளிட்ட பலரும் முற்றுமுழுதாக ஏற்க மறுத்தனர்.



அத்துடன், புதிய அதிபராக அருட்தந்தை லொபோனை நியமிக்க வேண்டும் எனத் தெரிவித்து, பாடசாலையில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களும் திங்கட்கிழமை வகுப்பறைகளை பகிஷ்கரித்தனர்.

அதன் பின்னர் அந்த இடத்துக்கு மட்டக்களப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் அழைக்கப்பட்டு இந்த விடயம் தொடர்பில் ஆசிரியர்களுடன்கலந்தாலோசிக்கப்பட்டது.

ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் மற்றும் பாடசாலை அபிவிருத்திச்சங்கத்தினின்கோரிக்கைக்கு அமைவாக ஆயரின்ஒப்புதலுடன் அருட் தந்தை லெபோன் பதில் அதிபராகக் கடமைகளைப் பொறுப் பெடுத்துக் கொண்டார்.

பழைய மாணவர்கள் உள்ளூர் கிளை, சர்வதேச கிளை மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்தில் இருக்கக் கூடிய அனைவரது ஏகோபித்த தெரிவாக அருட்தந்தை லெபோன் உள்ளமையுடன், பாடசாலையில் தற்போது எழுந்துள்ள முக்கிய பிரச்சினைகளுக்கும்தீர்வுகாண்பதற்கு அருட்தந்தை லெபோனால் முடியும் என்பதும், அருட்தந்தை லெபோன் அனைவராலும் விரும்பப்படுவதற்குக் காரணமாகும்.

# பதுளை வைத்தியசாலையில் வைத்தியர் திடீர் தாக்குதல்!

பதுளை வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப்பிரிவின் சிரேஷ்ட வைத்திய அதிகாரி பாலித ராஜபக்ஷ மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்ட சிறுமியொருவரை வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற நிலையில் அவரை வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதில் தாமதம் ஏற்பட்டதன் காரணமாக அவரது உயிரைக் காப்பாற்ற முடியவில்லை என வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து ஆத்திரமடைந்த மக்கள் வைத்தியசாலையில் குழப்பத்தில் ஈடுபட்டுள்ளதுடன் வைத்தியர் பாலித ராஜபக்ஷவை தாக்கியுள்ளனர். சம்பவம் தொடர்பில், வைத்தியர் பொலிஸில் முறைப்பாடு செய்ததையடுத்து, சந்தேகத்தின்பேரில்மூவர்கைதுசெய்யப்பட்டுள்ளனர். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து பதுளை பொது வைத்தியசாலைக்கு முன்பாக வைத்தியர்கள் மற்றும் சுகாதார ஊழியர்கள் நேற்று (திங்கட்கிழமை) பிற்பகல் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



வைத்தியர் பாலித ராஜபக்ஷ, விபத்தில் சிக்கி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நோயாளிக்கு சிகிச்சை அளிப்பதற்காக நள்ளிரவில் கால்சட்டையுடன் அவசரமாக மருத்துவமனைக்கு வருகை தந்து சிகிச்சையளித்தமை சமூக வலைத்தளங்களில் பலரது பாராட்டுக்களைப் பெற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# முதல் பெண் ஆளுநராக ஹோச்சுல் நியூயோர்கில் நேற்று பதவியேற்றார்



நியூயோர்க்,ஜன.03

அமெரிக்காவில் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 8 ஆம் திகதி அந்த நாட்டு நாடாளுமன்றத்துக்கும், மாகாண ஆளுநர்களுக்கும் தேர்தல் நடந்தது. அந்த வகையில் நியூயோர்க் மாகாண கவர்னர் பதவிக்கு ஆளும் ஜனநாயக கட்சி சார்பில் பெண் அரசியல் தலைவரான கேத்தி ஹோச்சுலும், குடியரசு கட்சி சார்பில் முன்னாள் ஜனாதிபதி டிரம்பின் ஆதரவாளரான லீ செல்டினும் போட்டியிட்டனர்.

இதில் கேத்தி ஹோச்சுல், லீ செல்டினை தோற்கடித்து, நியூயோர்க் மாகாணத்தின் 57 ஆவது ஆளுநராக தேர்ந்தெடுக்கப்பட்டார். இதன் மூலம் நியூயோர்க் மாகாணத்தின் முதல் பெண் ஆளுநர் என்கிற பெருமையை பெற்றார். இந்த நிலையில் கேத்தி ஹோச்சுல் நேற்று நியூயோர்க் மாகாண கவர்னராக பதவியேற்றார்.

அப்போது அவர் மாகாணத்தின் பொது பாதுகாப்பை அதிகரித்தல் மற்றும் அத்தியாவசியப் பொருள்களின் விலையைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முக்கியத்துவம் அளிக்கப்படும் என உறுதியளித்துள்ளார்.

# உலகப் பொருளாதாரம் இந்த ஆண்டில் சரியும்!

## நாணய நிதியத் தலைவர் எச்சரிக்கை



வொஷிங்டன், ஜன.03

கொரோனா வைரஸ், உக்ரைன் – ரஷ்யப் போர், மசகு எண்ணெய் விநியோகம், அரசியல் நிலைத் தன்மை, உற்பத்தி – நுகர்வு இடையேயான வேறுபாடு உள்பட பல்வேறு காரணங்களால் கடந்த சில ஆண்டுகளாக உலக பொருளாதாரம் வெகுவாக பாதிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில், மூன்றில்ஒருபங்குஉலகபொருளாதாரம் மந்த நிலையை சந்திக்கும்சர்வதேச நாணய நிதியத்தின் தலைவர் கிறிஸ்டலினா ஜார்ஜிவா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அமெரிக்க செய்தி நிறுவனத்திற்கு கிறிஸ்டலினா அளித்த பேட்டியில் கூறியதாவது,:-

உலகின் மிகப்பெரிய பொருளாதார நாடுகளான அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன், சீனாவில் பொருளாதாரம் வளர்ச்சி அடுத்தடுத்து குறைந்துள்ளதால் கடந்த ஆண்டை விட 2023 ஆம் ஆண்டு கடினமாக இருக்கும். உலக பொருளாதாரத்தில் மூன்றில் ஒரு பங்கு மந்தநிலையை சந்திக்கும் என நாங்கள் எதிர்பார்க்கிறோம். பொருளாதார மந்த நிலையில் இல்லாத நாடுகளிலும் கோடிக் கணக்கான மக்கள் பொருளாதார மந்த நிலையில் இருப்பதாக உணர்வார்கள்.

40 ஆண்டுகளில் முதல் முறையாக, 2022 ஆம் ஆண்டு சீனாவின் வளர்ச்சி உலக வளர்ச்சி விகிதத்தை விட குறைவாகவோ அல்லது அந்த அளவிலோ இருக்கும்.

சர்வதேச நாணய நிதியத்தில் 190 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன. உலக பொருளாதாரத்தை நிலைத்தன்மையுடன் வைத்திருப்பதே இந்த அமைப்பின் நோக்கம். பொருளாதார பிரச்சினைகள் எழுவது குறித்து முன்கூட்டியே எச்சரிக்கை அளிப்பது சர்வதேச நாணய நிதியத்தின் முக்கிய பணியாகப் பார்க்கப்படுகிறது. – என்று தெரிவித்துள்ளாரர்.

மூன்றில் ஒரு பங்கு உலக பொருளாதாரம் இந்த ஆண்டு மந்த நிலையைச் சந்திக்கும் என்று சர்வதேச நாணய நிதிய தலைவர் கிறிஸ்டலினா ஜார்ஜிவா எச்சரிக்கை விடுத்துள்ள விடயம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளதாகக் கூறப்படுகின்றது.

# இஸ்ரேல் படையினருடன் மோதல் 2 பாலஸ்தீனர்கள் சுட்டுக் கொலை



ஜெருசலேம், ஜன.03

கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம்14ஆம்திகதிமேற்குக்கரையில் இஸ்ரேலின் கட்டுப்பாட்டில் உள்ள ஜலாமிஹா சோதனைச்சாவடியில் பாதுகாப்பு பணியில் இருந்த இஸ்ரேல் பாதுகாப்புபடை வீரர் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. இந்தத் தாக்குதலில் இஸ்ரேல் பாதுகாப்புப்படை வீரர் உயிரிழந்தார். தாக்குதல் நடத்திய அகமது அய்மென் அபே, அப்துல் ரஹ்மான் ஹனி அபே ஆகிய 2 பாலஸ்தீனியர்களை இஸ்ரேல் படையினர் சுட்டுக்கொன்றனர்.

இந்நிலையில், இஸ்ரேல் பாதுகாப்பு படை வீரர் மீது தாக்குதல் நடத்தி சுட்டுக்கொல்லப்பட்ட இரு பாலஸ்தீனியர்களின் வீட்டை இடிக்க ஞாயிறுக்கிழமை இரவு மேற்குகரையின் ஜெனின் நகரில் உள்ள குபர் டன் நகருக்கு இஸ்ரேல் படையினர் சென்றனர். அப்போது, அங்கிருந்த பாலஸ்தீனியர்கள் , இஸ்ரேல் படையினர் மீது துப்பாக்கிச்சூடு தாக்குதல் நடத்தினர்.

இந்தத் தாக்குதல் இரு தரப்பு மோதலாக மாறியது. இஸ்ரேல் பாதுகாப்பு படையினருக்கும், பாலஸ்தீனியர்களுக்கும் இடையே துப்பாக்கிச்சூடு, ராக்கெட் தாக்குதல் நடத்தப்பட்டது. இந்த மோதலில் இஸ்ரேல் படையினரால் பாலஸ்தீனியர்கள் இருவர் சுட்டுக்கொல்லப்பட்டனர். முகமது சமீர் ஹோஷியா (வயது 22), பவத் முகமது அபே (வயது 25) ஆகிய 2 பாலஸ்தீனியர்கள் உயிரிழந்தனர்.

இதனிடையே, சுட்டுக்கொல்லப்பட்ட பவத் முகமது அபே தங்கள் அமைப்பை சேர்ந்தவர் என்று ஹமாஸ் அமைப்பு தெரிவித்துள்ளது. இந்த மோதலுக்கு பின் இஸ்ரேல் வீரரை கொன்ற பாலஸ்தீனியர்கள் அகமது அய்மென் அபே, அப்துல் ரஹ்மான் ஹனி ஆகியோரின் வீட்டை இஸ்ரேல் படையினர் இடித்தனர். மேற்குகரையில் இஸ்ரேல் படையினரின் தாக்குதலில் 2 பாலஸ்தீனியர்கள் உயிரிழந்தது 2023 ஆம் ஆண்டு முதல் நிகழ்வு எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# உக்ரைன் ராக்கெட் தாக்குதல் 63 ரஷ்ய வீரர்கள் உயிரிழப்பு!





கீவ்,ஜன.03

உக்ரைன் நடத்திய ராக்கெட் தாக்குதலில் 63 ரஷ்ய வீரர்கள் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. ரஷ்யாவின் கட்டுப்பாட்டில் உள்ள உக்ரைனின் டோனெட்க்ஸ் மாகாணத்தில் உள்ள மெகிவ்கா நகரில் ரஷ்ய வீரர்களின் தற்காலிக இராணுவத் தளத்தின் மீது உக்ரைன் இராணுவ தாக்குதல் நடத்தியது. ஹிம்ரஸ் ராக்கெட் ஏவு அமைப்பில் இருந்து ஏவப்பட்ட இந்த ராக்கெட் தாக்குதலில் 63 ரஷ்ய வீரர்கள் உயிரிழந்துள்ளனர்.

ஹிம்ரஸ் ராக்கெட் ஏவு அமைப்பில் இருந்து 6 ராக்கெட்டுகள் ஏவப்பட்டன எனவும், அதில் 2 சுட்டுவீழ்த்தப்பட்டன எனவும் ரஷ்ய இராணுவம் தெரிவித்துள்ளது. அதேவேளை, மெகிவ்கா நகரில் நடத்தப்பட்ட தாக்குதலில் 400 ரஷ்ய வீரர்கள் உயிரிழந்தனர் எனவும், 300 வீரர்கள் படுகாயமடைந்தனர் எனவும் உக்ரைன் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவிடமிருந்து வாங்கப்பட்ட ஹிம்ரஸ் ராக்கெட் ஏவு அமைப்பு மூலம் உக்ரைன் இந்த ராக்கெட் தாக்குதலை நடத்தியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

ரஷ்யா – உக்ரைன் இடையிலான இந்த போரில் உக்ரைனுக்கு அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் ஆதரவு அளித்து வருகின்றன. உக்ரைனுக்கு தேவையான ஆயுத உதவியை வழங்குவதுடன் அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகள் ரஷ்யா மீது பல்வேறு பொருளாதாரத் தடைகளையும் விதித்துள்ளன. போரை நிறுத்த பல்வேறு நாடுகள் முயற்சித்து வருகின்றன. ஆனால், அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளின் ஆயுத உதவியால் இந்த போர் பல மாதங்களாக நீடித்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.





# இந்தியாவுக்கு மிக அருகே பயங்கரவாதம்; ஆஸ்திரியாவில் ஜெய்சங்கர் எச்சரிக்கை!



வியன்னா, ஜன.03

ஆஸ்திரியா நாட்டில் இந்திய மத்திய வெளிவிவகார அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். அவர் அந்நாட்டின் வெளிவிவகார அமைச்சர் அலெக்சாண்டர் ஸ்காலென்பர்க்கை சந்தித்து பேசினார். இதன்பின்னர் இரு நாட்டு அமைச்சர்களும் நேற்றையதினம் இணைந்து பத்திரிகையாளர்கள் சந்திப்பை நடத்தினர். இதில் பேசிய மத்திய அமைச்சர் ஜெய்சங்கர், பயங்கரவாதத்தினால் சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்புக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல்களை பற்றி ஆஸ்திரிய நாட்டு தலைவர்களுடன் பேசினேன். எல்லை கடந்த பயங்கரவாதம், வன்முறை, தீவிரவாதம் மற்றும் அடிப்படைவாதம் உள்ளிட்டவற்றை பற்றியும் நாங்கள் விரிவாக பேசினோம்." என்றார்.

"போதைப் பொருள்கள், சட்டவிரோத ஆயுத விற்பனை மற்றும் பிற வடிவிலான சர்வதேசகுற்றங்கள் ஆகியவை ஒன்றுடன் ஒன்று ஆழ்ந்த தொடர்பில் இருக்கும்போது, மேற்குறிப்பிட்ட பயங்கரவாத விளைவுகளை ஒரு குறிப்பிட்ட பகுதிக்குள் அடக்கி விட முடியாது. இந்தப் பயங்கரவாதத்தின் மையம் இந்தியாவுக்கு மிக அருகே அமைந்துள்ளது. எங்களுடைய அனுபவங்கள் மற்றும் பார்வைகள் பிறருக்கு பயனுள்ளவையாக இருக்கும் – என்று அவர் கூறியுள்ளார்.

இந்தச் சந்திப்பில், ஆஸ்திரிய வெளியுறவு அமைச்சர் தவிர்த்து, செக் குடியரசின் ஜன் லிபாவ்ஸ்கை மற்றும் ஸ்லோவேக்கியா நாட்டின் வெளியுறவு அமைச்சர் ராஸ்டிஸ்லாவ் கேசர் ஆகியோரையும் மத்திய அமைச்சர் ஜெய்சங்கர் இன்று சந்தித்து பேசியுள்ளார்.

இந்தச் சந்திப்பு பற்றி செய்தியாளர்களிடம் குறிப்பிட்ட அமைச்சர் ஜெய்சங்கர், இந்தியா மற்றும் ஐரோப்பிய யூனியன் அமைப்பின் உறவுகள், நமது அண்டை நாடுகள், இந்தோ-பசிபிக் விவகாரம் மற்றும் உக்ரைனில் நடைபெற்று வரும் போர் உள்ளிட்ட விடயங்கள் பற்றி உரையாடல் மேற்கொண்டோம் என்று கூறியுள்ளார்.

## நீட்தேர்வுக் எதிரான தமிழக அரசின் மனு ஒருமாதத்துக்குத் தள்ளிவைப்பு



புதுடெல்லி, ஜன.03

நீட் தேர்வை கட்டாயமாக்கிய சட்ட திருத்தத்துக்கு எதிராக தமிழக அரசு அளித்த மனு மீதான விசாரணையை ஒரு மாதத்துக்கு உச்ச நீதிமன்றம் தள்ளி வைத்துள்ளது.

மத்திய அரசு கொண்டு வந்த நீட் தேர்வுக்கு தமிழகத்தில் கடும் எதிர்ப்பு நிலவி வந்தது. இதனால் நீட் தேர்வுக்குத் தடை கோரி நீண்ட நாள்களாக பல போராட்டங்கள் நடத்தப்பட்டன. இந்த நிலையில், நீட் தேர்வை சட்டமாக்கிய சட்ட திருத்தத்துக்கு தடை கேட்டு தமிழக அரசு சார்பில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனு மீதான விசாரணை இன்று உச்ச நீதிமன்றில் நடந்தது. இந்த மனு மீதான விசாரணையை ஒரு மாதத்துக்கு சுப்ரீம் கோர்ட் தள்ளிவைத்துள்ளது.

## 108 ஆவது இந்திய அறிவியல் மாநாட்டை இன்று காணொலி ஊடாக ஆரம்பித்து வைத்தார் மோடி

புதுடெல்லி, ஜன.03

ஆண்டுதோறும் இந்தியாவில் உள்ள முன்னணி விஞ்ஞானிகள், ஆராய்ச்சியாளர்கள், கல்வியாளர்கள் கலந்து கொள்ளும் இந்திய அறிவியல் மாநாடு நடைபெறுவது வழக்கம். எனினும் கடந்த 2 வருடங்களாக கொரோனா தொற்று காரணமாக இந்த மாநாடு நடைபெறவில்லை.

இந்நிலையில் பிரதமர் மோடி காணொலிக் காட்சி வழியே 108 ஆவது இந்திய அறிவியல் மாநாட்டை இன்று காலை 9.30 மணியளவில் தொடங்கி வைத்துள்ளார்.

இந்த நிகழ்ச்சியானது ராஷ்டிரசந்த் துகாடோஜி மகராஜ் நாக்பூர் பல்கலை கழகத்தின் அமராவதி சாலை வளாகத்தில் தொடங்குகிறது. இந்த நிகழ்ச்சியில் மராட்டிய கவர்னர் பகத்சிங் கோஷ்யாரி, மத்திய அமைச் சர் நிதின் கட்காரி, மத்திய இணை அமைச்சர் ஜிதேந்திரா சிங், மகாராஷ்டிர முதல் அமைச்சர் ஏக்நாத் ஷிண்டே, துணை முதல் அமைச்சர் பட்னாவிஸ் உள்ளிட்டோர் கலந்து கொள்கின்றனர். இந்த

மாநாட்டில் பங்கேற்க பொதுமக்களுக்கும் அனுமதி அளிக்கப்பட உள்ளது.

இந்திய அறிவியல் மாநாட்டின் இந்த ஆண்டிற்கான மைய பொருளாக, மகளிருக்கு அதிகாரமளித்தலுடன் கூடிய நீடித்த வளர்ச்சிக்கு அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் என்பது இருக்கும்.




இந்த மாநாட்டில் நீடித்த வளர்ச்சி, மகளிருக்கு அதிகாரமளித்தல் மற்றும் அவற்றை அடைவதற்கான அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்தின் பங்கு ஆகிய விவகாரங்கள் பற்றி ஆலோசிக்கப்படும். இதில்

பங்கு பெறுவோர், கற்பித்தல், ஆராய்ச்சி மற்றும் தொழில் துறையில் பெண்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான வழிகள் பற்றி விவாதிப்பார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# காஷ்மீரில் கொடூரம்; தொடர் பயங்கரவாதத் தாக்குதல் 4வயதுக் குழந்தை உள்பட இருவர் பலி; 7பேர் படுகாயம்

ஸ்ரீநகர், ஜன.03

காஷ்மீரில் நேற்று முன்தினம் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்ட அதே இடத்தில் நேற்றுக் குண்டு வெடித்தது. இதில் 4 வயது குழந்தை உள்பட 2 பேர் பலியாகியுள்ளனர். காஷ்மீரின் ரஜோரி மாவட்டத்துக்கு உட்பட்ட டாங்கிரி கிராமத்துக்குள் நேற்று முன்தினம் மாலை பயங்கர ஆயுதங்களுடன் நுழைந்த 2 மர்ம நபர்கள் அங்கிருந்த 3 வீடுகளில் சரமாரியாக துப்பாக்கிச்சூடு

நடத்தினர். இதில் அந்த வீடுகளில் இருந்த 4 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர். 6 பேர் பலத்த காயம் அடைந்தனர்.

துப்பாக்கிச்சூடு நடத்திய மர்ம நபர்கள் அங்கிருந்து தப்பியோடிய நிலையில் தகவல் அறிந்து அங்கு விரைந்து சென்ற பாதுகாப்பு படையினர் அந்தப் பகுதியை சுற்றி வளைத்துத் தீவிர தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். எனினும் யாரும் பிடிபடவில்லை. இந்த நிலையில் மர்ம நபர்களின் துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்தவரின் உடலுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக அவரது வீட்டில் நேற்று

காலை உறவினர்கள், நண்பர்கள் என ஏராளமானோர் திரண்டிருந்தனர்.

அப்போது காலை 9.30 மணியளவில் அந்த வீட்டுக்கு அருகே பயங்கர சத்தத்துடன் குண்டு வெடித்தது. இதில் 2 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர். இவர்கள் இருவரும் அக்கா, தம்பி ஆகிய சிறுவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் 3 சிறுவர்கள் உள்பட 7 பேர் படுகாயம் அடைந்தனர். அவர்கள் அனைவரும் உடனடியாக மீட்கப்பட்டு அருகில் உள்ள

வைத்தியசாலையில் சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டனர்.

குண்டு வெடிப்பு சம்பவம் குறித்த தகவல் கிடைத்ததும் பொலிஸ் அதிகாரிகள் மற்றும் பாதுகாப்பு படை வீரர்கள் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று குண்டு வெடிப்பு நடந்த இடத்தை ஆய்வு செய்தனர். துப்பாக்கிச்சூடு நடந்த 14 மணி நேரத்துக்குள் இந்த குண்டு வெடிப்புச் சம்பவம் நிகழ்ந்துள்ளது. ஒரே இடத்தில் அடுத்தடுத்து நடத்தப்பட்ட பயங்கரவாத தாக்குதல்களால் அங்கு

பதற்றம் அதிகரித்துள்ளது. இதையடுத்து அங்கு பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது. இதனிடையே இந்தத் தொடர் பயங்கரவாத தாக்குதல்களை கண்டித்து ரஜோரி மாவட்டம் முழுவதும் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் டாங்கிரி கிராமத்தில் நடந்த பயங்கரவாத தாக்குதல்களுக்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ள காஷ்மீர் துணை நிலை கவர்னர் மனோஜ் சின்ஹா தாக்குதல்களில் உயிரிழந்த பொதுமக்களின் குடும்பத்தினருக்கு ரூ.10 லட்சம் நிவாரணம் மற்றும் அரசு வேலை வழங்கப்படும் என உறுதியளித்துள்ளார் என்று கூறப்பட்டுள்ளது.





# ஐ.எஸ். அமைப்பில் சம்பந்தப்பட்ட நபர்களுடன் தொடர்பில் இருந்தவர் காத்தான்குடியில் கைது

## பயங்கரவாதத் தடுப்பு பிரிவினர் நடவடிக்கை

ஐ.எஸ்.அமைப்புடன் தொடர்பில் இருந்தார் என்ற குற்றச்சாட்டின் கீழ், இந்தியாவில் அண்மையில் கைது செய்யப்பட்டவருடன் தொடர்பில் இருந்த ஒருவர் காத்தான்குடியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

முப்பது வயதுடைய ஒருவரே பயங்கரவாதத் தடுப்பு பிரிவினரால் சந்தேகத்தின் பேரில், நேற்றுத் திங்கட்கிழமை இரவு கைது செய்துள்ளனர் எனப் பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் தற்கொலை தாரியான சஹ்ரான் ஹசீமுடன் தொடர்பில் இருந்தனர் என்றக் குற்றச்சாட்டின் பேரில், ஐ.எஸ். அமைப்பைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டனர்.

2022 ஒக்டோபர் மாதத்தில் இந்தியா கோயம்புத்தூரில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சந்தேக நபர்களுடன் தொடர்பு கொண்டிருந்ததார் எனஜ் கூறப்படும் கே் ஹிதாயத்துல்லா மற்றும் இந்தியாவில் பயங்கரவாதத் தாக்குதல்களை நடத்தும் திட்டங்களில் பங்கேற்றவர் எனக் கூறப்படும் சனோபர் அலி ஆகியோரே டிசெம்பர் 29 ஆம் திகதி இந்தியாவில் கைது செய்யப்பட்டனர்..

இந்தச் சந்தேகநபர்கள் 2022 பெப்ரவரியில் ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வனப்பகுதியின் ஆசனூர் மற்றும் கடம்பூர் பகுதிகளில் உள்ள வனப்பகுதியின் உட்பகுதியில் சதித்திட்டத்தில் ஈடுபட்டமையுடன், இலங்கையில் 2019 ஏப்ரல் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பிரதான சூத்திரதாரியான சஹ்ரான் ஹசீமுடன் தொடர்பில் இருந்துள்ளமையும் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட ஐ.எஸ். அமைப்பைச் சேர்ந்தவருடன் காத்தான்குடியைச் சேர்ந்த 30 வயதுடையவர் முகநூலில் தொடர்புகளைப் பேணி வந்துள்ளார் என இந்திய உளவுத்துறை விசாரணையின் தெரியவந்ததையடுத்து இலங்கை உளவுத்துறைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்பிரகாரம் காத்தான்குடியிலுள்ள அவரது வீட்டில் வைத்து விசாரணைக்காக பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் அவர் கைது செய்யப்பட்டு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார் என்றும் பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.

# அரச காணிகளின் ஆக்கிரமிப்புக்கு எதிராக மட்டு. மண்முனை வடக்கில் ஆர்ப்பாட்டம்!



மட்டக்களப்பு மண்மனை வடக்கு பிரதேச செயலக பிரிவு உட்பட்ட சவுக்கடி பகுதியில் சட்ட விரோதமாக அரச காணிகளை சில நபர்கள் கையகப்படுத்துவதை கண்டித்து நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டதுடன் பிரதேச செயலகமும் முற்றுகையிடப்பட்டது.

மட்டக்களப்பு காந்தி பூங்கா முன்பாக ஆர்ப்பாட்டம் நடைபெற்று பின்னர் அங்கிருந்து மண்முனை வடக்கு பிரதேச செயலகம் வரை கோசங்களை எழுப்பியவாறு சென்று காணி அபகரிப்பு தொடர்பாக பிரதேச செயலாளரிடம் ஆர்ப்பாட்டக்காரர்களால் கோரிக்கைகளை முன்வைக்கப்பட்டன. இதன் போது காணி அபகரிப்புக்கு எதிராக உரிய தீர்வினை தற்போதே வழங்க வேண்டும் எனக் கோரி பிரதேச செயலாளருடன் ஆர்ப்பாட்டக் காரர்கள் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

இதனைத் தொடர்ந்து பிரதேச செயலாளர் அங்கிருந்து அகன்று செயலகத்திற்குள் சென்றார்.

இந்த நிலையில் அங்கு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் பிரதேச செயலகத்திற்கு முன்பாக கோசங்களை எழுப்பியவாறு உரிய தீர்வு கிடைக்கும் வரை யில் இவ் விடத்தை விட்டு செல்ல மாட்டோம் என பிரதேச செயலகம் முன்பாக இருந்தனர். இதனைத் தொடர்ந்து இரண்டாவது முறையாக பிரதேச செயலாளர் மற்றும் மட்டக்களப்பு பொலிஸார் உடனடி பிரச்சனை தொடர்பாக மக்கள் உடன் கதைத்த போது மீண்டும் மக்கள் உரிய முறையில் தீர்வினை எடுக்கா விட்டால் இவ்விடத்தில் இருந்து செல்ல மாட்டோம் என்றதனைத் தொடர்ந்து பிரதேச செயலாளர் மீண்டும் அலுவலகத்திற்குள் சென்றார்.

தொடர்ந்து மக்கள் உரிய தீர்வு வழங்க வேண்டும் என கூறி பிரதேச செயலகம் முன்பாக கோசங்கள் எழுப்பியவாறு இருந்தனர். அதனைத் தொடர்ந்து மூன்றாவது முறையாக பிரதேச செயலாளர் உடன் ஒரு சிலர் பிரச்சினை தொடர்பாக கலந்துரையாடியனர். கலந்துரையா டலின் போது பிரதேச செயலாளர் குறித்த அரச காணிகளை அபகரிக்கின்ற நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற் கொள்ளதாகவும், அப்பகுதியில் மரங்களை வெட்டுகின்ற நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக் கைகளை மேற்கொள்ள மக்களால் கோரிக்கை முன்வைக்கப்பட்ட போது மட்டக்களப்பு பொலிஸார் அதற்கு உரிய நடவடிக்கைகளை சரியான முறை யில் முன்னெடுப்பார்கள் எனவும் வாக்குறுதி அளித்ததன் பிற்பாடு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட வர்கள் அவ்விடத்தில் இருந்து விலகிச் சென்றனர்.

# கிரான் பாலத்தின் சீரமைப்புப் பணிகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்பட உள்ளன

## ராஜாங்க அமைச்சர் சந்திரகாந்தன் தகவல்



கிரான் பாலம் உடைப்பெடுத்துள்ளதானது ஓர் அனர்த்தமாகும். இப் பாலத்தை மிக விரைவாக புனரமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என கிராமிய வீதிகள் ராஜாங்க அமைச்சர் சந்திரகாந்தன் இன்று அவரது அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர் –

கிரான் பாலம் உடைப்பெடுத்துள்ளதானது ஓர் அனர்த்தமாகும். தற்போது இந்தப் பாலம் நீர் ஊற்று காரணமாக மிக ஆழமாகி உள்ளது. இதனை தற்காலிகமாக புனரமைப்பது என்றால் குறைந்தது 20 மில்லியன் ரூபாய் தேவைப்படுவதாகவும், அதனை நீர் வழிந்தோட கூடிய வகையில் புனரமைக்கும் பணிகளை இம்மாத இறுதி தருவாயில் செய்ய முடியும்.

இந்த வீதியானது மாகாண சபைக்குள் காணப்படுகிறது. அவர்களிடத்தில் நிதி இல்லாத காரணத்தினால் இதனை மத்திய அரசுக்குள் உள்வாங்குவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதனைப் பாவிக்கும் விவசாயிகளும், அரச ஊழியர்களும், அப்பகுதி மக்களும் மிகுந்த சிரமத்திற்குள் இருக்கின்றமையை நாங்கள் நன்கு அறிவோம். தண்ணீர் வேகம் குறைவடைந்ததும் மிக விரைவாக பணிகள் ஆரம்பிக்கப்பட உள்ளது.- எனவும் கிராமிய வீதிகள் ராஜாங்க அமைச்சர் சந்திரகாந்தன் தெரிவித்தார்.

# சமாதானப் புறா பறக்க விடப்பட்டு ஆண்டு முதல் நாள் பணி ஆரம்பம்

## கல்முனை ஆதாரவைத்திய சாலையில்








(வி.ரி. சகாதேவராஜா)

சமாதானப்புறா பறக்க விடப்பட்டு அரச சத்தியப் பிரமாணம் எடுத்த நிகழ்வு நேற்று திங்கட்கிழமை இடம்பெற்றது.

கல்முனை ஆதாரவைத்திய சாலையில் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் இரா. முரளீஸ்வரன் தலைமையில் மேற்படி நிகழ்வு நடைபெற்றது.

புத்தாண்டில் அரச அலுவலக கடமைகளை சம்பிரதாய பூர்வமாக ஆரம்பிக்கும் முதல் நாள் நிகழ்வில், முன்னதாக தேசிய கொடியேற்றத்துடன் தேசிய கீதம் இசைக்கப்பட்டது.

வைத்திய அத்தியட்சகர் டாக்டர் இரா முரளீஸ்வரன் மற்றும் பிரதி வைத்திய அத்தியட்சகர் டாக்டர் ஜெ.மதன் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

வைத்தியசாலை வைத்தியர்கள், தாதிய உத்தியோகத்தர்கள், ஊழியர்களும் கலந்து முதல் நாள் சத்தியபிரமாண நிகழ்வில் பங்குபற்றினர்.

இந்நிகழ்வில் மரம் ஒன்றும் நடப்பட்டது..மேலும் சமாதானத்திற்காக புறா ஒன்றும் பறக்கவிடப்பட்டது.

இறுதியாக நிர்வாக உத்தியோகத்தர் தோமஸ் தேவருளினால் நன்றியுரை நிகழ்த்தப்பட்டது.

# மலையக கல்வி வளர்ச்சிக்காக என்னால் முடிந்த அனைத்தையும் செய்துமுடிப்பேன்!




## அரவிந்தகுமார் சபதம்

மலையக கல்வி வளர்ச்சிக்காக என்னால் முடிந்த அத்தனை விடயங்களையும் வெற்றிகரமாக செய்து முடிப்பேன். இது விடயத்தில் நான் உறுதியாகவே இருக்கின்றேன். எனவே, இலக்கை அடையும்வரை நிச்சயம் போராடுவேன். – என்று கல்வி இராஜாங்க அமைச்சர் அ. அரவிந்தகுமார் தெரிவித்தார்.

மலையக மக்கள் முன்னணியின் ஸ்தாபக தலைவரும், முன்னாள் அமைச்சருமான அமரர் பெ.சந்திரசேகரனின் 13 ஆவது சிரார்த்த தின மற்றுமொரு நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை கதிரேசன் ஆலய மண்டபத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

இதன்போது மேடையில் வைக்கப்பட்டிருந்த அமரர் பெ.சந்திரசேகரனின் உருவப்படத்திற்கு மலர் மாலையை முன்னணியின் தலைவரும், அமைச்சருமான அரவிந்தகுமாரும், பெ.இராதா கிருஷ்ணனும் அணிவித்தார்கள்.

இதனையடுத்து முன்னணியின் முக்கியஸ்தர்களும் கலந்துகொண்டு பொது மக்களும் நினைவுச்சுடர்களை ஏற்றியமையும் குறிப்பிடதக்கது.

இந்நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய கல்வி இராஜாங்க அமைச்சர் அ.அரவிந்த குமார்–

மறைந்த தலைவர் அமரர் பெரியசாமி சந்திரசேகரனுடன் 24 மணிநேரமும் இணைந்து பயணித்தவன் நான். அவரின் ஒவ்வொரு அசைவுக்கும் எனக்கு அர்த்தம் புரியும். அப்படிப்பட்ட ஒரு தலைவரின் ஆசியால்தான் எனது அரசியல் பயணம் நீடித்தது. அவரின் ஆசியால்தான் இன்று கல்வி இராஜாங்க அமைச்சு பதவிகூட கிட்டியது எனக் கருதுகின்றேன்.

தற்போதைய அரசியல்வாதிகள் பதவிகளுக்காகவும், அரசாங்க தலைவரை திருப்திபடுத்துவதற்காகவும் ஆமாம்சாமி போட்டு ஜால்ரா அரசியலை முன்னெடுக்கின்றனர்.

ஆனால் அமரர் சந்திரசேகரனின் செயற்பாடுகள் வித்தியாசமானவை. அமைச்சரவையில் இருந்து கொண்டே அரசாங்கத்தை எதிர்த்தவர். அவசரகாலச் சட்டத்துக்கு ஆதரவு வழங்க மறுத்தவர். அதற்கு சார்பாக ஒருநாள் கூட வாக்களித்தமை கிடையாது.

பொங்குதமிழ் நிகழ்வில் பங்கேற்பதற்காக வெளிநாடு செல்வார். அவரின் உரை தொடர்பாக இங்குள்ள புலனாய்வுத்துறை கழுகுபார்வை செலுத்தும். ஆனாலும் சொல்ல வேண்டிய விடயங்களை பகிரங்கமாகச் சொல்லிவிடுவார்.

எக்காரணத்தை கொண்டும் பின்வாங்கமாட்டார். உணர்வுடன் செயற்பட்டவர் அவர். அவரின் வழிகாட்டலில் வந்த நான் இன்று கல்வி இராஜாங்க அமைச்சராக இருக்கின்றேன்.

கல்விதான் ஒரு சமூகத்தின் தலையெழுத்தை மாற்றும். அதனை நிச்சயம் செய்வதற்கு முயற்சிப்பேன். – என்றார்.

# 2,500 குடும்பங்களை இலக்காகக் கொண்ட சமூக சமையலறை வேலைத்திட்டம் ஆரம்பம்!



வரலாற்றுச் சிறப்புமிக்க ஹுனுப்பிட்டி கங்காராம விகாரையை மையமாகக் கொண்ட சமூக சமையலறை திட்டம் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமானது.

தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க இந்தத் திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

கொம்பனித்தெரு பொலிஸ் எல்லைக்குட்பட்ட ஹுனுபிட்டிய, கொம்பனித்தெரு, காலி முகத்திடல், இப்பன்வல, வேகந்த ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்குள், உணவு கிடைப்பதில் சிரமம் உள்ள 2 ஆயிரத்து 500 குடும்பங்களை இலக்காகக் கொண்டு இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இந்த சமூக சமையலறைத் திட்டம் ஜனவரி 01 முதல் 40 நாள்களுக்கு தினந்தோறும் செயல்படுத்தப்படும். அந்த காலகட்டத்தில் இதன் மூலம் பயன்பெறும் குடும்பங்களில் உள்ள நபர்களை இலக்காகக் கொண்டு சுயதொழில் வாய்ப்புகளை உருவாக்குதல், தொழில்சார் பயிற்சி வழங்குதல், சமூக மேம்பாடு உள்ளிட்ட நலத்திட்டங்கள் மூலம் இந்தக் குடும்பங்களின் பொருளாதாரநிலையை மேம்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி அலுவலகத்தின் தலைமையில், முப்படையினர், பொலிஸார், சிவில் பாதுகாப்புத்திணைக்களம் மற்றும் பல்வேறு அரச நிறுவனங்கள், சர்வதேச லயன்ஸ் கழகங்கள், றோட்டரிக் கழகம், உள்ளிட்ட பல தனியார் நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் கங்காராம விகாரையில் இந்த சமூக சமையலறைத் திட்டம் நடைமுறைப் படுத்தப்படுகிறது.

ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜேவர்தன, முன்னாள் அமைச்சர் தயா கமகே, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் (ஓய்வு பெற்ற) கமல் குணரத்ன, பாதுகாப்புப் படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா, முப்படைகளின் தளபதிகள், பொலிஸ்மா அதிபர், சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம், ஜனாதிபதியின் இணைப்புச் செயலாளர் ராஜித அபேகுணசேகர, ஜனாதிபதி ஊடகப் பணிப்பாளர் டப்ளியூ. எம்.கே விஜய பண்டார உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# மரத்திலிருந்து தவறிவீழ்ந்து சிறுவர் இல்ல சிறுவன் சாவு!

கடவத்தை – ராம்முத்துகல பகுதியில் அமைந்துள்ள சிறுவர் இல்லத்தில் 12 வயது குழந்தையொன்று மரத்தில் இருந்து தவறி விழுந்து உயிரிழந்துள்ளது.

ஆர்.எம்.மதுசங்க என்ற 12 வயதுடைய சிறுவன் பல வருடங்களுக்கு முன்னர் சிறுவர் இல்லத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார் எனக் கூறப்படுகின்றது.

இந்த சிறுவன் சிறுவர் இல்லத்தில் அமைந்துள்ள பகுதியில் மரத்தில் ஏறி விளையாடிக்கொண்டிருந்த போது மரத்திலிருந்து தவறி விழுந்ததில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குழந்தை சுமார் இருபது அடி உயரத்தில் இருந்து கீழே விழுந்துள்ளதுடன், விபத்தின் பின்னர் குழந்தையை வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நீண்ட நேரத்தின் பின்னர் அருகிலுள்ள விகாரைக்கு வந்த அயலவரின் வாகன உதவி மூலம் குழந்தை ராகம வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் அங்கு குழந்தை உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.



சம்பவத்தில் உயிரிழந்த சிறுவனின் சடலம் கம்பஹாவிலுள்ள தனியார் மயானத்தில் இன்று பிற்பகல் அடக்கம் செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஆர்.எம்.மதுசங்க என்ற 12 வயதுடைய சிறுவன், தாயாரால் கைவிடப்பட்ட நிலையில் தந்தை மறுமணம் செய்துக்கொண்டதுடன் சித்தியின் பராமரிப்பின்றி சிறுவர் இல்லத்தில் சேர்க்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



கொழும்பு புதுச்செட்டித் தெரு சாயி பாபா ஆலயத்தில் நடைபெற்ற விசே பூஜையின் போது லண்டனில் இருந்து வருகை தந்த ஓம் சரவணபவ சுவாமிகள் வரவேற்கப்படுவதையும், ஆலய பிரதம அறங்காவலர் எஸ்.என்.உதயநாயகன் வரவேற்புரை நிகழ்துவதையும் பஜனையில் கலந்துகொண்டோரையும் படங்களின் காணலாம்.

# வவுனியா வியாபார நிலையத்திலிருந்த வெடிகளை போதையால் கொளுத்தி வெடிக்கச்செய்த விசமிகள்!



வவுனியாவில் புதுவருட கொண்டாட்டங்கள் இடம்பெற்றுவரும்நிலையில்ஹொரவப்பொத்தானை வீதியில் உள்ள வர்த்தக நிலையமொன்றினுள் மது போதையில் இருந்த இளைஞர்களை உள்ளடக்கிய ரவுடிகள் அங்கு விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த பட்டாசுகளை வர்த்தக நிலையத்தினுள் வெடிக்கச் செய்துள்ளனர்.

இதன்போது வர்த்தக நிலைய உரிமையாளர், வாடிக்கையாளர்கள் நிற்பதால் எதனையும் செய்து விடாதீர்கள் எனக் கும்பிட்ட போதிலும், அவர்கள் பட்டாசுகளைக் கொளுத்தியதால் மக்கள் நாலா திசைக்கும் பதறி ஓடியுள்ளனர்.

பட்டாசு வெடித்தமையால் கடையில் பொருள்கள் வைக்கப்பட்டிருந்த முன் பகுதி சேதமடைந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக வர்த்தக நிலைய உரிமையாளர் வவுனியா பொலிஸில் முறைப்பா டொன்றைப் பதிவு செய்துள்ளார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

திருமணத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622

## வீதியை......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எமக்கான வீதியைப் புனரமைத்துத் தராமல், அரசியல்வாதிகள் எவரும் ஊர் பக்கம் வரக்கூடாது. அவ்வாறு வந்தால் அடித்து விரட்டுவோம்.

-இவ்வாறு ஹட்டன், வெளிஓயா - 22 ஆம் தோட்ட பகுதி மக்கள் எச்சரித் துள்ளனர்.

ஹட்டன், வெளிஓயா 22 ஆம் இலக்க தோட்டத்தில் உள்ள 4 வயது சிறு வன் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார். சுகவீனமுற்றிருந்த குறித்த சிறுவனை, உரிய நேரத்துக்கு வைத்தியசாலைக்குக் கொண்டு செல்வதற்கு வாகனம் இருக்க வில்லை. வீதி குன்றும் குழியுமாக காணப்படுவதால்வெளியில்இருந்துகூட வாகனத்தை பெற முடியாத நிலை ஏற் பட்டது.

இந்நிலையிலேயே இதற்கு மேலும் மக்கள் சாவதற்கு இடமளிக்க முடியாது எனவும், வீதியை உடன் புனரமைத்து தருமாறு வலியுறுத்தியும் தோட்ட மக்கள் இன்று போராட்டத்தில் ஈடுபட்டனர். சிறார்களும் இந்தப் போராட்டத்தில் பங்கேற்றனர்.

சுமார் 2 கிலோ மீற்றர் வரையான வீதி குன்றும் குழியுமாகக் காணப்படுவதால் மழைக்காலங்களில் பாடசாலை மாண வர்கள், உயிரைக் கையில் பிடித்துக் கொண்டே பயணிக்கின்றனர் எனவும், இது தொடர்பில் பல தடவைகள் கோரிக்கை விடுக்கப்பட்டும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும் போராட்டக்காரர்கள் சுட்டிக்காட்டினர்.

சிறுவனின் மரணத்துக்கு இந்த வீதியும் ஒரு காரணம். இனியும் மக் களைப் பலிகொடுக்க நாம் தயாரில்லை. எமக்கான வீதி புனரமைக்கப்பட வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் அரசியல்வாதிகளை தோட்டத்துக்குள் விட மாட்டோம் - எனவும் தோட்ட மக்கள் திட்டவட்டமாகத் தெரிவித்தனர்.

## மார்ச் 4 இல்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்துடன், உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வேட்புமனு கோரல் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் நாளைமறுதினத்துக்குள் வெளியிடப்படவுள்ளது.

பிரதேச சபைகள், நகர சபைகள் மற்றும் மாநகர சபைகள் என 340 உள்ளூராட்சி சபைகளின் பதவிக் காலம் ஓராண்டுகாலம் நீடிக்கப்பட்டது. இதன்படி 2023 மார்ச் 20 ஆம் திகதி க்குள் புதிய சபைகள் நிறுவப்பட வேண்டும்.

அதேபோல் தேர்தலை நடத்துவதற்கான நிதியையும், தி றைசேரியிடமிருந்து தேர்தல் ஆணைக்குழு கோரியுள்ளது.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.01.2023 இல் வெளியிடப்பெற்றது.